## டெங்கு நோய் தடுப்பு தினம் (Anti Aedes Day)

**வியாழக்கிழமை - 05.10.2017**

காஞ்சிபுரம் மாவட்டம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வியாழக்கிழமைதோறும் 'டெங்கு ஒழிப்பு தினம்' கடைபிடிக்கப்பட்டு டெங்குவை பரப்பும் 'ஏடிஸ்' கொசு உற்பத்தியாவதை தடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் - மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 03.10.2017 அன்று மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் டெங்கு நோய்க்கட்டுப்பாடு, சிகிச்சை முறைகள் குறித்த காணொளிக்காட்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் காஞ்சிபுரம் மாவட்டத்தினைச் சுற்றியுள்ள பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு அதிகமுள்ளதினைத் தொடர்ந்து, டெங்கு நோய் தாக்கத்தின் தடுப்பு பணிகள் (களப்பணி) பற்றிய ஆயவு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேசிய மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்டத்தில் வியாழக்கிழமைதோறும் 'டெங்கு ஒழிப்பு தினம்' கடைபிடிக்கப்படும் அன்று ஒரு மருத்துவ அலுவலருடன் கூடிய மருத்துவக்குழு ஒவ்வொரு பள்ளிகளுக்கும் சென்று ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வையும், நோய்பரப்பும் மூலங்களை அகற்றும் வழிமுறைகளையும் விளக்குமாறு தெரிவித்தார். மேலும் கீழ்கண்ட மூன்று செயல்பாடுகளை நடைமுறைப்படுத்த உத்தரவிட்டார்.

1. மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிகளிலும் காலை வழிபாட்டின் போது டெங்கு நோய் குறித்த உறுதிமொழி எடுக்கப்பட வேண்டும்.

2. அனைத்து மாணவர்களுக்கும் நிலவேம்பு குடிநீர் கொடுக்கப்பட வேண்டும்.

3. மேலும் பள்ளி மற்றும் பள்ளி வளாகத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் அரசு அலுவலகங்களிலும் உள்ள நோய் பரப்பும் மூலங்களை அகற்றி தூய்மை படுத்த வேண்டும்.

இதுமட்டுமின்றி அன்றயை தினம் அரசு அலுவலகங்களில ஏடிஸ் கொசுக்கள் உற்பத்தியை தடுக்கும் வகையில் கொசுமருந்து அடிப்பது, நீர்தேங்கி கொசு உற்பத்தி செய்யும் பழைய வீணான பொருட்கள் அப்புறப்படுத்தப்படும். நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவது, கொசு மருந்து அடிப்பது உள்ளிட்ட நடவடிக்கைகள் தீவிரப்படுததப்பட்டு கண்காணிக்கப்படும் டெங்கு காய்ச்சல் அதிகமுள்ள பகுதிகளில் தடுப்புப்பணிகளை போர்க்கால அடிப்படையில் துரிதப்படுத்துமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மரு.உஷாசதாசிவன், முதல்வர், செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி, செங்கல்பட்டு, மரு. ஆர். சுந்தரராசு, இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்), காஞ்சிபுரம், மரு.தி.செந்தில்குமார், துணை இயக்குநர் நலப்பணிகள், காஞ்சிபுரம் சுகாதார மாவட்டம், மரு.V.K.பழனி, துணை இயக்குநர் நலப்பணிகள, செங்கல்பட்டு சுகாதார மாவட்டம், மரு.S.அய்யாசாமி, மாவட்ட சித்த மருத்துவ அலுவலர், காஞ்சிபுரம் மற்றும் மரு.A.இராமகிருஷ்ணன், நியமன அலுவலர், உணவு பாதுகாப்பு பிரிவு, காஞ்சிபுரம் ஆகிய அலுவலர்கள் பங்கேற்றனர்.